மாதம் இரு முறை வெளிவரும் இலவச இதழ், யூலை 2007 - ஒகஸ்ட் 2007, குரல் 17

# லண்டன் குரல்
Voice of London Tamils


## மங்கள நிகழ்ச்சிகளுக்கு மேளம் நாதஸ்வரம்



ஏற்பாடு செய்து தரப்படும். மேலதிக விபரங்களுக்கு:
ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், வோல்தம்ஸ்ரோ.
0208527 3819


**யார் அங்கே!! எம் தமிழ் அகதி அமைப்புகள் எங்கே?** பக். 03


**தற்கொலை செய்வேன் ஆனால் தஞ்சம் கேட்க மாட்டேன்** பக். 04

**அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சி......** பக். 06

**தமிழ் இனவாதமும் சோனகர் இனமும்** பக். 07

### தஞ்சம் நிராகரிக்கப்பட்ட இளைஞர்களின் போராட்டம் :

# யாருக்குச் சொல்லி அழ!!! கண்ணீர் கதைகளில் வளர்கிறது கடன் சுமை.




# சட்ட நிறுவனங்களின் வங்கிக் கணக்குகள் மட்டும் எகுறுகிறது!!!

Harmondsworth Immigration Removal Centre ல் ஆரம்பிக்கப்பட்டு ஏனைய இடங்களுக்கும் பரவிய தஞ்சம் நிராகரிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களின் உண்ணாவிரதம் முடிவுக்கு வரவுள்ளது. தமது தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட விரக்தி நிலையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வுண்ணாவிரதம் எதிர்பார்க்கப்பட்டது போல் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை. தமிழ் மக்களிடையே மட்டுமே இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி இருந்தது. இந்த உண்ணாவிரத காலப் பகுதியிலும் உள்துறை அமைச்சு தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்பிக் கொண்டே இருந்துள்ளது. தமிழ் சட்ட நிறுவனங்கள் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களிடம் உண்மையான நிலையை விளக்காமல் தமது வங்கி வைப்பை வளர்க்கப் பயன்படுத்துவதாக குற்றம்சாட்டப்படுகிறது. திருப்பி அனுப்பப்படுபவர்கள் அதற்கு முன்னர் சட்ட நிறுவனங்களுக்கு 3000 பவுண் வரை செலுத்தி உள்ளனர். (தொடர்ச்சி 2ம் பக்கம்)

உண்மைகள் உறங்குவதில்லை.

குரல்17, யூலை07 - ஒகஸ்ட்07

லண்டன் குரல்

# முதற்காலாண்டில் (31 மார்ச் 2007): இலங்கையர்கள் 280 பேர் தஞ்சம் கோரி இருந்தனர். 90 பேர் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர். 110 திருப்பி அனுப்பப்பட்டனர்.

## அரசியல் தஞ்சம்

தற்போது பதவியேற்று உள்ள கோடன் பிறவுன் தலைமையிலான புதிய அரசும் ஜக்கி சிமித் தலைமையிலான புதிய உள்துறை அமைச்சும் அரசியல் தஞ்சத்தை கனிவுடன் நோக்குவார்கள் என்பதற்கு இடமில்லை.

அவர்கள் இருவரும் தமது பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட சில மணிநேரத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு அறிவுசார் குடிவரவையும் கடுமையாக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

பிரித்தானியத் தமிழ் சமூகம் பெரும்பாலும் அரசியல் தஞ்சம்கோரிய சமூகம் என்ற வகையில் உள்துறை அமைச்சின் கடும்போக்கினால் மிகவும் பாதிக்கப்படுகின்ற சமூகமாக உள்ளது. மேலும் இலங்கையில் தொடரும் யுத்த சூழல் நிலைமையை மிகவும் மோசமாக்கி உள்ளது.

உள்துறை அமைச்சின் இந்த சட்டக் கெடுபிடிகளால் அனாதரவாக்கப்பட்டு திருப்பி அனுப்புவதற்காக தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டு உள்ள இளைஞர்கள் இறுதி முயற்சியாக மட்டுப்படுத்தப்பட்ட உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு உள்ளனர். சட்ட ரீதியாக அணுகப்பட வேண்டிய இவ்விடயத்தை இவ்வாறான உண்ணாவிரதப் போராட்டங்களாலோ ஊர்வலங்களாலோ வென்றெடுக்க முடியாது என்பது கசப்பான உண்மை.

ஆனால் இந்தத் தமிழர்கள் விடயத்தில் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணிகளின் நேர்மையின்மை, சரியான தகவல்களை வழங்காதது போன்ற விடயங்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீதும் அவர்களது குடும்பங்கள் மீதும் பொருளாதாரச் சுமையை ஏற்றுகின்றது.

அவர்களுடைய வழங்குகளை சுயாதீனமாகவும் இலவசமாகவும் செய்யக் கூடிய சட்ட நிறுவனங்கள் இருந்தும் அவர்களுக்கு அதனை சிபாரிசு செய்யாது தமது வங்கி வைப்பில் மட்டும் குறியாக இருப்பது மன்னிக்க முடியாதது.

ஆசிரியர்: த ஜெயபாலன்
நிர்வாகம்: ரி கொன்ஸ்ரன்ரைன்
ஆசிரியர்குழு: Dr பி சிவக்குமார், ஆர் சுரேஸ்குமார், ஜோ ஜெயவேந்தன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK
செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 020 8905 0452

'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

# தஞ்சம் நிராகரிக்கப்பட்ட இளைஞர்களின் போராட்டம்




### Harmondsworth Immigration Removal Centre ல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள்:

ஆர் ராகவன் (25) அல்வாய், பருத்தித்துறை; எம் செந்தில்நாதன் (31) மாங்குளம்; எம் காண்டிபன் (25) மிருசுவில், யாழ்ப்பாணம்; ராஜகுலசிங்கம் (39) மூதூர், திருகோணமலை; எஸ் சாந்தகுமார் (32) முல்லைதீவு; என் ஜீவராஜ் (32) பூவரசங்குளம், வவுனியா; எஸ் பாக்கியநாதன் (39) வவுனியா; ஆர் மகாராஜன் (34) பருத்தித்துறை; எஸ் தேவநேசன் (45) கலட்டி, பருத்தித்துறை; பி என் றொமிலர் (57) வேலணை; எம் கலைசெல்வன் (27) பூந்தோட்டம், வவுனியா; பி.யோகசந்திரன் (25) யாழ்ப்பாணம்; வி விஸ்வதீபன் (23) முல்லைத்தீவு; வி தங்கேஸ்வரன் (33) கூனித்தீவு, மூதூர்; ரி சிவகுமார் (33) வல்வெட்டித்துறை; ஏ ஜோர்ச் றெஜினோல்ட் செம்பியன்பற்று (34); ஏ நீதிரஞ்சன் (24) யாழ்ப்பாணம்; மயூரன் (24) யாழ்ப்பாணம்; பி சிவகுணன் (31) வவுனியா; வி ஆர் ஜெயகுமார் (42) வேலணை; ஏம் ஜ அகமட் (42) கொழும்பு; ஏம் ரதீஸ்ராஜ் (38) தெல்லிப்பழை; என் சுதர்சன் (35) மட்டக்களப்பு; கே முருகதாஸ் (22) கல்முனை, செல்வரத்தினம் (28) யாழ்ப்பாணம்.

Harmondsworth Immigration Removal Centre ல் சில்லாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் அலோசியஸ் ஜீட் கிறிஸ்ரி மற்றும் கோபாலசாமி இளையராஜா ஆகிய இருவரும் யூலை 9 இல் ஆரம்பித்து வைத்த மட்டுப்படுத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்த தடுப்பு முகாம்களுக்கும் பரவியது. அவ்விருவருக்கு ஆதரவாக யூலை 22ல் ஹமர்ன்ஸ்வேர்த்தில் உள்ள சி மற்றும் டி பிரிவுகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 28 பேர் மட்டுப்படுத்தப்பட்ட உண்ணா விரதத்தை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

அவர்களைத் தொடர்ந்து Haslar Immigration Removal Centre, Oakington Reception Centre, Tinsley House Immigration Removal Centre ஆகிய தடுப்பு மையங்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த முறையே 10, 23, 10 தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களும் மட்டுப் படுத்தப்பட்ட உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பான மேலதிக மான தகவல்களைப் பெறுவதற் காக லண்டன் குரல் பத்திரி கைக் குழு யூலை 27ல் அன்று ஹமன்ட்ஸ்வேர்த் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள சிலரைச் சந்தித்தது. மேலும் வெவ்வேறு முகாம்களில் உள்ளவர்களுடனும் தொலை பேசியில் தொடர்பு கொண்டு தகவல்கைள சேகரித்தோம்.

ஹமர்ன்ட்ஸ்வேத்முகாமில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளவர்கள் பெரும்பாலும் லண்டணில் தரை இறங்கியதும் விமானநிலையத்திலேயே தஞ்சம்கோரி உள்ளனர். அவர்க ளுடைய தஞ்சக்கோரிக்கை Fasttrack எனப்படும் வேகமான பரிசீலனை முறையில் ஆராயப்பட்டு உடனடியாக நிராகரிக்கப்பட்டு தற்போது திருப்பி அனுப்பப்படுவதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு தடுத்து வைக்கப்பட்டு இருப்பவர்கைள பெரும்பாலும் தமிழ் சட்ட நிறுவனங்களே பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் சட்ட நிறுவனங்கள் அனைத்துமே அவர்களிடம் £ 1,000 - £ 2,000 பவுண் வரை கட்டணமாக அறவிட்டு உள்ளனர்.

அதேசமயம் Refugee Legal Centre - RLC, Immigration Advisory Service - IAS ஆகிய சுயாதீன நிறுவனங்கள் தரமான சட்டப் பிரதிநிதித்துவத்தை இலவசமாக வழங்கி வருகின்றன. இந்நிறுவனங்களுடாக தங்களை சட்டப் பிரதிநிதித்துவம் செய்த வர்கள் தடுப்பு முகாமில் இருந்து வெளியேறி உள்ளதாக அங்குள்ளவர்கள் லண்டன் குரலுக்குத் தெரிவித்தனர். மலும் Legal Aid உள்ள நிறுவனங்களும் இலவச சட்ட சேவையை வழங்குகின்றன.

ஏன் நீங்கள் இந்த இலவச சட்ட சேவையைப் பயன்படுத்தவில்லை எனக் கேட்டதற்கு அது அரசசார்புடையது எனத் தாங்கள் நினைத்ததாகத் தெரிவித்தனர். உங்களுடைய சட்டப்பிரதிநிதி உங்களிடம் இந்த இலவச சேவைகள் பற்றி விளக்கமளிக்கவில்லையா எனக் கேட்டதற்கு அவர்கள் அப்படி எந்த ஆலோசனையையும் வழங்கவில்லை எனத் தெரிவித்தனர்.

தாங்கள் தங்களது சட்ட நடவடிக்கைகளுக்காக தமிழ் சட்ட நிறுவனங்களுக்கு 2000 பவுணுக்கு மேல் செலவழித்து உள்ளதாகக் கூறும் அவர் மேலும் கூறுகையில் தாங்கள் இலவச சட்ட சேவையை நாடியிருக்கலாம் என்றும் தெரிவித்தனர். உறுதியாக தங்கள் வழக்குளை வெல்வார்கள் என்றால் தாங்கள் கடன்பட்டும் 5000 பவுணும் கொடுக்கத் தயார் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

(தொடர்ச்சி 3ம் பக்)

**உண்மைகள் உறங்குவதில்லை.**

- 1-1-2007 முதல் 31-3-2007 வரை 110 பேர் பலாத்காரமாகத் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.
- யூலை மாதத்தில் உண்ணாவிரதம் தொடர்கையில் 15 பேர் வரை திருப்ப அனுப்பப்பட்டு உள்ளனர்.
- சுஜீபன் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயற்சி செய்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார்.
- திருப்பி அனுப்பப்பட்ட சிவஞானசுந்தரம் சிவரூபன் நீர்கொழும்புச் சிறையில் அடைக்கப்பட்டார்.
- தடுத்து வைக்கப்பட்டவர்கள் £1,000 - £5,000 பவுண் வரை சட்டநிறுவனங்களுக்கு செலுத்தி உள்ளனர்.

# யாருடைய தவறு ?

ஹமர்ண்ட்ஸ்வேர்த் முகாமில் உண்ணாவிரதம் தொடர்கையில் ரின்ஸிலி ஹவுஸ் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஹேமா துரைசிங்கம் என்ற இளம் பெண் யூலை 25 அன்று கை விலங்கிடப்பட்ட நிலையில் பலாத்காரமாகத் திருப்பி அனுப்பப்பட்டார். அவர் பயணம் செய்த அதே விமானத்தில் வேறு முகாம்களில் இருந்து அழைத்துவரப்பட்ட மேலும் மூன்று தமிழ் இளைஞர்களும் ஏற்றி அனுப்பப்பட்டு உள்ளனர். 2001ல் பிரித்தானியா வந்து அரசியல் கோரியிருந்து இவரின் தஞ்ச விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு சட்ட செயற்பாடுகள் முடிவடைந்த நிலையில் இவர் திருப்பி அனுப்பப்பட்டு உள்ளார்.

இவரை விடுவிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் £3,000 வரை செலவழிந்ததாக திருப்பி அனுப்பப்பட்ட ஹேமாவின் துணைவர் லண்டன் குரலுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் வதிவிட உரிமை இல்லாததால் தங்களால் பதிவுத் திருமணம் செய்து கொள்ளவும் முடியவில்லை என அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டின் முதற் காலாண்டில் 110 பேர் பலாத்காரமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர். தினம் 1.2 பேர் என்ற அடிப்படையில் உள்துறை அமைச்சு இலங்கைக்கு தஞ்சம் மறுக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்பி வருகிறது. தனது துணைவி அனுப்பப்பட்ட இருவார காலப்பகுதியில் 15 பேர் திருப்பி அனுப்பப்பட்டதை தான் அறிந்துள்ளதாகத் தெரிவித்தார். இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட சிவஞானசுந்தரம் சிவரூபன் என்ற இளைஞர் இலங்கையில் தரையிறங்கியதும் கைது செய்யப்பட்டு நீர்கொழும்புச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளார்.

அரசியல் தஞ்சம் தொடர்பாக பிரித்தானியாவில் கொண்டுவரப்பட்ட கடுமையான சட்டங்களால் பிரித்தானியாவில் 30,000 க்கும் அதிகமான தமிழர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் ஒரு சில மாதங்கள் முதல் 14 ஆண்டுகள் வரை பிரித்தானியாவில் வாழ்ந்தவர்களாக உள்ளனர்.

ஹமன்ட்ஸ்வேர்த் முகாமில் உள்ளவர்கள் பெரும்பாலும் ஓரிரு மாதங்களுக்குள் பிரித்தானியாவுக்கு வந்தவர்களாக உள்ளனர். ஏனைய முகாம்களில் உள்ளவர்கள் நீண்டகாலமாக பிரித்தானியாவில் வாழ்பவர்களாக உள்ளனர்.

ரின்ஸ்லி ஹவுஸ் முகாமில் தடுத்த வைக்கப்பட்டிருக்கும் ரவிச்சந்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அங்குள்ளவர்கள் 6 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரை பிரித்தானியாவில் வாழ்ந்த 8 பேர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இவர்களில் சிலர் தொடர்ச்சியாக மருத்துவ சிகிச்சை பெற வேண்டியவர்களாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இங்கு சில வாரங்கள் முதல் ஆறுமாத காலம் வரை தடுத்து வைக்கப்பட்டவர்கள் உள்ளனர்.

இந்த முகாம்களில் நிச்சயமற்ற எதிர்காலத்துடன் வாழும் இவர்கள் கடுமையான மனஉளைச்சலுக்கு உள்ளாகி உள்ளனர். இதனாலேயே இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது. ஏற்கனவே யுத்தத்தின் வடுக்களையும் துப்பாக்கிச் சன்னங்களையும் சுமந்து வந்த பாக்கியநாதன் உண்ணாவிரதத் தால் உடல் நலிவடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். இச் சம்பவம் ஹமன்ட்ஸ்வேத் முகாமில் இடம்பெற்றது.

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளவர்களின் உச்சகட்டமாக ரின்ஸ்லி ஹவுஸ் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுஜீபன் என்பவர் அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலை செய்ய முயன்று ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

அரசியல் தஞ்சம் கோரும் தமிழர்களின் இந்த நெருக்கடியில் பொருளாதார இலாபம் அடைபவர்கள் பெரும்பாலும் தமிழ் சட்டத்தரணிகளாகவும் சட்ட நிறுவனங்களாகவுமே உள்ளனர்.

யூலை 25ல் ரின்ஸ்லி ஹவுஸ் முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட ரஞ்சித் என்பவர் இது பற்றி கருத்துக் கூறுகையில் "ஹோம் ஒபிஸ் எப்படியாவது எங்களைத் திருப்பி அனுப்பவே முயற்சி செய்கிறது. இப்போதைக்கு என்னை வெளியே விட்டு உள்ளார்கள். ஆனால் எனது தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டே உள்ளது. திருப்பியும் பிடிப்பார்கள். இதில் சொலிசிற்ரேசும் ஒன்றும் செய்ய முடியாது. பரிஸ்டர்களுக்கான கட்டணமும் கூடியுள்ளது. பணம் நஸ்டம் தானட என்ன செய்ய. நடக்கிறதை கண்டு கொள்வோம்" என்று விரக்தியுடன் தெரிவித்தார்.

"பெரும்பாலான தஞ்சக் கோரிக்கை களில் தஞ்ச விண்ணப்பங்களை தயார் செய்யும் சட்டத்தரணிகளோ, அவர்களின் உதவியாளர்களோ தஞ்சக் கோருவோருடன் நேரத்தைச் செலவிட்டு முறையான விண்ணப்பத்தை தயாரிப்பதில்லை. அதனால் உள்துறை அமைச்சு முதற்கோணல் முற்றும் கோணல் என்ற வகையில் முடிவுகளை எடுக்க வகை செய்கின்றது." என்கிறார் பெயர்குறிப்பிட விரும்பாத முன்னணி சட்டவல்லுனர் ஒருவர். இவர் இவ்வாண்டு விண்ணப்பித்த 16 தஞ்ச விண்ணப்பங்களில் 15 விண்ணப்பங்களுக்கு வதிவிட உரிமையை பெற்றுக் கொடுத்துள்ளார். மேலும் ஒரு விண்ணப்பம் மேன்முறையீட்டு பரிசீலனையில் உள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில் "சிரத்தையுடன் தயார் செய்யப்படாத விண்ணப்பங்கள் தகமையற்ற விண்ணப்பங்களாக நிராகரிக்கப்பட்டு உள்துறை அமைச்சு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க முற்பட்டதும் புதிய விண்ணப்பங்களைச் செய்து (fresh application) இழுத்தடிப்பதையே தமிழ் சட்ட நிறுவனங்கள் ஒரு நடைமுறையாகக் கொண்டுள்ளன." என்றும் கூறினார்.

மேலும் தமிழ் சட்ட நிறுவனங்கள் பெரும்பாலும் Legal Aid எடுப்பதற்கு தகமையற்றவையாக இருப்பதால் சட்ட செலவுகளை தஞ்ச விண்ணப்பம் கோருவோரே செலுத்த வேண்டி உள்ளது.

சட்டத்தரணிகள் சட்டநிறுவனங்கள் தொடர்பாக மேற்குறிப்பிட்ட கருத்துக்களை முன்வைத்தவர்கள் தமது பெயர் விபரங்களை வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டதால்

தமிழர்களின் இந்த தஞ்ச வழக்குகள் வெற்றி பெறாததற்கு சட்டத்தரணிகளை மட்டும் குற்றசாட்ட முடியாது என்கிறார் சட்டத்தரணி அ கனநாதன். தஞ்ச விண்ணப்பத்தை செய்பவரின் ஒத்துழைப்பின்மை சம்பந்தப்பட்டவர் தடுத்து வைக்கப்பட்டிருப்பின் அவரது நெருங்கிய உறவினரின் ஒத்துழைப்பின்மை என்பனவும் கணிசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது எனவும் அவர் குறிப்பிட்டார். சில தஞ்ச வழக்குகளில்

நாம் தடுப்பு முகாம்களில் உள்ள சிலருடன் தொடர்பு கொண்ட போது

Linga & Co

Kingston Solicitors

K Ravi Solicitors

Markandan & Co

Nag & Co

S Satha & Co Solicitors and

Sriharans Solicitors

ஆகிய சட்ட நிறுவனங்களால் பிரதிநிதித் துவப்படத்தப்பட்ட ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவர்கள் இருப்பது தெரியவந்தது. இவர்களைத் தவிர இன்னும் சில சட்ட நிறுவனங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டவர்களும் அங்கு தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

## யார் அங்கே!! எம் தமிழ் அகதி அமைப்புகள் எங்கே?

அரசியல் தஞ்சம் என்பது முற்றிலும் சட்டத்திற்கு உட்பட்ட விடயமாக உள்ள நிலையில் உண்ணாவிரதம், ஊர்வலம் என்பன சட்ட மாற்றத்திற்கு இட்டுச் செல்வதற்கான வாய்ப்புகள் இல்லாமலேயே உள்ளது. தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் உண்ணாவிரதம் புரிந்து கொள்ளக்கூடியது. அது அவர்கள் எவ்வளவு தூரம் விரக்தி அடைந்துள்ளார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால் வெளியே உள்ளவர்களும் தயா இடைக்காடர் போன்ற கவுன்சிலர்களும் அதனையே பிரதி செய்ய முற்பட்டு உள்ளனர்.

மழைக்கு முளைக்கும் காலான்களாக தமிழ் அமைப்புகள் தோண்றுவதும் மறைவதும் சாதாரணமாகிவிட்டது. இருக்கும் அமைப்புகளும் செய்திக்குறிப்பு ஒன்றைவிட்டு தங்களது இருப்பை அறிவித்துக் கொள்வதுடன் நின்றுவிடுகின்றன. இவற்றின் சமூக அக்கறைக்கு என்பது அவர்களின் சமூக அந்தஸ்தை உறுதிப்படுத்துவதற்கும் தம்நலன் சார்ந்ததாகவுமே உள்ளது.

இந்நிலையில் Tamil Lawyers Association என்ற அமைப்பு கூடி ஆராய்ந்து பிரித்தானிய பா உ க்களைச் சந்தித்து இலங்கையின் நிலை சீராகும் வரை திருப்பி அனுப்புவதை நிறுத்தும்படி கோரவுள்ளதாகத் தெரிவித்து உள்ளனர். சட்டப்படி இந்த வாதம் தோல்வி



அடைந்த நிலையிலேயே தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர். இந்த முடிவை சட்டப்படி எதிர்த்து வாதிடுவதே ஒரே வழி. அதற்கு முயற்சி செய்ய இந்தச் சட்டத்தரணிகள் தயாரில்லை.

இச்சட்டத்தரணிகள் அமைப்பில் உள்ள சட்டத்தரணி சிதம்பரப்பிள்ளை தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழுவின் TRAG தலைவராகவும் உள்ளார். TRAG இடம் இந்த தஞ்சம்கோரியவர்கள் பற்றிக் கேட்டால் அவர்கள் தங்கள் செயற்பாடுகள் தஞ்சம் கோரியோர் விடயத்தில் மாறிவிட்டதாகக் கூறுகிறார்கள். தங்களால் எதுவும் செய்ய முடியாது என்கிறார்கள். பெயரளவில் மட்டுமே அவர்கள் அகதிகளுக்கான நடவடிக்கை குழுவாக உள்ளனர்.

CDSTA - Commette to Defend Srilankan Tamil Asylumseekers என்ற ஜெயரஞ்சன் தலைமையிலான அமைப்பு சில ஆண்டுகளுக்கு முன் கூட்டம் கூடியதுடன் காணாமலேயே போய்விட்டது.

இவற்றைவிட Action Group of Tamil Asylum Seekres, Tamil Detainees Support Group போன்ற அமைப்புகளும் உள்ளன. இவ்வாறான இன்னும் சில தமிழ் அமைப்புகளும் இருக்கின்றன.

தமிழ் ஊடகங்களில் தமது சமூக அக்கறையை விளம்பரப்படுத்தி தமது அரசியல், சமூக அந்தஸ்தை உயத்துவதற்கு அப்பால் இவர்களால் எதனையும் சாதித்துவிட முடியாது என்பது ஆச்சரியத்திற்குரியதல்ல. இவர்களது வாயாஜாலங்களும் ஊடக அறிக்கைகளும் அர்த்தமற்றவை.


தமிழ் தஞ்சம் கோரியவர்களின் உரிமையை சட்ட ரீதியாக வெல்வதற்கான வேலைத் திட்டங்களே உடனடியாக செய்யப்பட வேண்டும்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

**2007ல் இலங்கையின் பொருளாதாரம் 7.5 வீதமாக இருக்கும் என மத்திய வங்கி மதிப்பிட்டு உள்ளது. கடந்த 29 ஆண்டுகளில் இது மிகவும் உறுதியான பொருளாதார வளர்ச்சியாகக் கருதப்படுகிறது.**

# அரசியல் செய்ய இயலவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன் வெளிநாட்டில் தஞ்சம் கேட்கமாட்டேன் - அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா

என்னால் இலங்கையில் அரசியல் செய்ய இயலவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேனே ஒழிய வெளிநாட்டில் தஞ்சம் கேட்க மாட்டேன் என்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. இந்தியன் வைஎம்சிஏ யில் யூலை 22ல் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். லண்டன் வந்த அமைச்சரை லண்டன் தமிழ் குழுக்கள் சந்தித்து மாற்றுக் குழுக்களுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தன. இச்சந்திப்பில் அரசியல் தீர்வு, இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல், விடுதலைப் புலிகள் பற்றிய விடயங்கள் பேசப்பட்டன. வெவ்வேறு அரசியல் தளங்களில் இருந்தவர்களும் இதில் கலந்து கொண்டனர்.



தான் யாழ் செல்லும் போதெல்லாம் ஏராளமான மக்களைச் சந்திப்பதாகத் தெரிவித்த அமைச்சர் அம்மக்களுக்கு நிறையத் தேவைகள் இருப்பதாகவும் ஒரே ஒரு பிரதிநிதியால் அவர்களுடைய அத்தனை எதிர்பார்ப்புகளையும் செய்துவிட முடிவதில்லை என்றும் தெரிரித்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கள் அத்தனை பேர் இருந்தும் அவர்கள் என்னத்தைச் செய்தார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மகிந்தவுக்கு தமிழ் சமூகம் தேவைப் பட்டிருக்கலாம். அதனால் என்னோடு நெருக்கமாக இருந்திருக்கலாம் என்று தொடர்ந்த அமைச்சர். எங்கள் அரசியல் பலத்திற்கு ஏற்பவே எங்களால் செய்யக் கூடியதாக எருக்கும் என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு வானமே எல்லை என்றும் மாற்று இயக்கங்களுக்கு இலங்கையில் சில அழுத்தங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த நாடுகளைச் சேர்ந்த ஜனநாயக சக்திகளைக் கொண்ட ஒரு குழு உருவாக்கப்பட்டு அவர்கள் இலங்கை வந்து ஜனாதிபதி மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்து அரசியல் தீர்வு பற்றிய புலம்பெயர்ந்த தமிழர்களின் நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.


இயக்க ஐக்கியம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், இயக்கங்களிடையே ஏற்பட்ட பிளவுகளுக்கு இந்திய உளவு நிறுவனமான றோவை குற்றம்சாட்ட முடியாது என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் இயக்கங்களிடையெ புரிந்துணர்வு இருக்காததே பிளவுகளுக்கு முக்கிய காரணம் எனத் தெரிவித்தார்.

ஈரோஸ் வசந்தனின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் புலிகளும் ஜேவிபி யும் தீர்வுக்குத் தடையாக இருப்பதாகவும் தீர்வுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து தீர்வுக்கு அதரவு வரவில்லை என்றும் தெரிவித்தார். வசந்தனின் மற்றுமொரு கேள்விக்குப் பதிலளித்த டக்ளஸ் அமைச்சரான தனக்கு வந்த அழைப்பிதலேயே தமிழ் இருக்கவில்லை என்றும் அது பற்றி தான ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டியதாகவும் இவ்வற்றுக்காக தான் தொடர்ந்தும் போராடி வருவதாகவும் தெரிவித்தார். இவற்றையெல்லாம் வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈபிஆர்எல்எப் உறுப்பினர் லாபிர் அங்கு கருத்து வெளியிடுகையில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் வடக்கு கிழக்கு மாகாண சபையை உருவாக்கிய போது அதற்கு இந்திய வல்லரசின் பலம் இருந்தது. சிங்களவர்களை திருமலையில் இருந்து வெளியேற்ற அங்குள்ள சிங்களப் பெரும் புள்ளிகளை கொலை செய்வதற்கு இந்திய அமைதிப்படை 24 மணிநேரத்தை வழங்கியது. அப்போது அந்த 24 மணி நேரத்திற்குள் அங்கிருந்த சிங்களத் தலைமைகள் கொல்லப்பட்டு சிங்களவர்கள் தங்கள் குடியேற்றங்களில் இருந்து கலைத்து விடப்பட்டனர். ஆனால் இப்போது மீண்டும் குடியேற்றங்கள் வேகமாக இடம்பெறுவதாக லாபீர் சுட்டிக்காட்டினார். இதே கருத்தை வசந்தனும் அங்கு சுட்டிக்காட்டினார்.

எல்லோரும் ஒற்றுமைப்பட வேண்டும் சுடுபடாமல் கருத்துக்களுடன் முட்டி மோதுங்கள் என புளொட் உறுப்பினர் பிரதீபன் அங்கு தெரிவித்தார். பொதுக்கருத்து அடிப்படையில் மாற்று கருத்துடையவர்கள் அணிசேர வேண்டும் என ராஜன் தெரிவித்தார்.

விதாரனவின் தீர்வுத்திட்டம் தான் ஒரே தீர்வு என்றால் உங்களுக்குள் என்ன முரண்பாடு என்று கேள்வி எழுப்பினார் ஊடகவியலாளர் சீவகன். அவரைத் தொடர்ந்த மூன்றாவது மனிதன் ஆசிரியர் பௌசர் இலங்கையின் இனப்பிரச்சினையை



இராணுவரீதியாக தீர்க்க முடியாது என்பதே அன்றும் இன்றும் நிலைமை என்றார். புலம்பெயர்ந்த சமூகத்தில் உள்ள ஜனநாயக சக்திகள் இணைந்து ஒன்றுபடுவதற்கான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். ஈபிடிபி அங்குள்ள பாராளுமன்ற அங்கத்துவத்தைக் கொண்ட பலமான அமைப்பு என்பதையும் அங்கு சுட்டிக்காட்டினார்.

பாலஸ்தீனத்தில் உள்ள Palestine National Council போன்ற அமைப்பு புலிகள் உட்பட்ட தமிழ் குழுக்களுக்கு பொருந்தும் என முன்னாள் ரெலோ உறுப்பினர் சார்ள்ஸ் தெரிவித்தார்.

ரிபிசி வானொலி இயக்குநர் ராம்ராஜ் ஈபிடிபி - கருணா அணியினருக்கு இடையிலான மோதலைச் சுட்டிக்காட்டி கருணா அணியினரின் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்தார். மேலும் கருணா அணியினரின் யாழ்ப்பாணத் தலைமை என்ற வாதத்தையும் அவர் நிராகரித்தார். அந்தந்த அமைப்புகளைச் சேர்ந்த மட்டக்களப்பு இளைஞர்களே அங்கு செயற்படுவதையும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

சுமார் மூன்று மணிநேரம் இடம்பெற்ற இச்சந்திப்பு மாற்று இயக்கங்களிடையே ஒற்றுமையை வலியுறுத்தி முடிவடைந்தது.

**உள்நாட்டு யுத்தத்தை தொடர்வதற்கு இலங்கை 1.3 பில்லியன் டொலரைச் செலவிடுகிறது. முன்னரைக் காட்டிலும் பாதுகாப்புச் செலவீனம் 45 வீதத்தால் அதிகரித்து உள்ளது.**

**உண்மைகள் உறங்குவதில்லை.**

**கொலம்பியாவில் FARC உள்ள இயக்கத்திற்கு அடுத்தது உலகின் இரண்டாவது பெரும் செல்வந்த இயக்கம் வி புலிகள். இவர்கள் ஆண்டுக்கு 200 - 300 மில்லியன் டொலர்கள் இலாபமீட்டுகின்றனர்.**

லண்டனில் ஏழு தமிழ் தேசிய கூட்டமைப்பு பா உ க்கள்: கவுன்சிலர் போல்

# "இவர்கள் தங்கள் பாத்திரத்தை புரிந்து கொள்ள வேண்டும்"

ஐரோப்பிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் வந்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு ஒன்று தமிழர் தகவல் நடுவத்தில் யூலை 29ல் இடம்பெற்றது. இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தன், சந்திரநேரு, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா, கஜேந்திரன் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பு இரு கட்டங்களாக இடம்பெற்றது.

முதற்கட்டமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பா உ க்கள் தமது ஐரோப்பிய விஜயத்தின் நோக்கத்தை விளக்கினர். பிரித்தானியா உட்பட 9 ஐரோப்பிய நாடுகளுக்கு கடந்த ஒரு மாதகாலமாக விஜயம் செய்த இவர்கள் இலங்கையில் இடம்பெறும் மனிதஉரிமை மீறல்கள் மற்றும் அரச பயங்கரவாதம் தொடர்பாக அந்நாட்டு அரசுகளுக்கு விளக்கமளித்து உள்ளனர்.



அடுத்த கட்டமாக இடம்பெற்ற தொழிற்கட்சியின் கவுன்சிலர் போல் சத்தியநேசன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சார முறைமைகள் வடிவங்கள் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி விளக்கமளித்தார்.

இலங்கையில் இன்று பிரதானமான சக்திகள் இரண்டு என இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் குறிப்பிட்ட கவுன்சிலர் போல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருந்தும் அவர்களுக்கு பேச்சுவார்த்தையில் பார்வையாளர்களாகக் கூட அமர முடியாது எனக் குறிப்பிட்டார். இது தமிழ் தேசியக் கூட்டமைப்பு (nothing) எதுவுமற்றது என்பதையே காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐரிஸ் புரட்சிகர இராணுவத் திற்கும் (ஐஆர்ஏ) சின்பெயினுக்கும் இடையிலான உறவை உதாரணத்திற்கு எடுத்த அவர் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையே அவ்வாறான தனித்தன்மைகளோ சுயாதீனமோ இல்லை எனத் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களால் தெரிவு செய்யப்பட்டது என்ற வகையில் அவர்கள் மக்களின் நலனுக்காக சமாதானத்திற்காக பணியாற்ற வேண்டிய பொறுப்புடையவர்கள் எனத் தெரிவித்தார். இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் சமாதானத்தை நோக்கிச் செல்ல அழுத்தம் கொடுக்கவும் இரு தரப்பினரது மனித உரிமை மீறல்களையும் கண்டிகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பொறுப்புடையது எனத் தெரிவித்த கவுன்சிலர் போல் அதனைச் செய்ய தமிழ் தேசியக் கூட்டமைப்பால் முடியுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரித்தானிய சட்டத்தை உருவாக்குபவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இந்த அடிப்படைத் தகுதிகளை நிரூபிக்க வேண்டியதன் அவசியத்தை கவுன்சிலர் அங்கு விளக்கினார். இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவசியமல்ல அவர்களுக்கு ஒரு முக்கிய பாத்திரம் உள்ளது. அதனை செய்ய தமிழ் தேசியக் கூட்டமைப்பு தன்னைத் தயாராக்க வேண்டும் எனவும் கவுன்சிலர் போல் தனது விளக்க உரையின் முடிவில் குறிப்பிட்டார்.

தமிழர் தகவல் நடுவத்தால் தெரிவு செய்யப்பட்டு அழைக்கப்பட்டிருந்தவர்கள் மட்டுமே இதில் கலந்துகொண்டனர்.

# பொது உடன் பாட்டுக்கு வர வேண்டும் லண்டனில் ஆ.சங்கரிக்கு அழுத்தம்

மாற்று இயக்கங்கள் பொது உடன்பாடு ஒன்றுக்கு வந்து ஐக்கியப்பட வேண்டும் என்ற அழுத்தம் புலம்பெயர் நாடுகளில் உள்ள ஜனநாயக சக்திகளால் தீவிரமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக யூலை 29ல் இந்தியன் வைஎம்சிஏ இல் இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரியுடனான சந்திப்பிலும் இவ்வழுத்தம் கொடுக்கப்பட்டு உள்ளது.

ஸ்ருட்காடில் யூலை 15ல் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈபிஆர்எல்எப், புளொட் ஆகிய கட்சிகளின் சந்திப்பு ஐக்கியத்திற்கு வழிவகுக்கவில்லை என்றும் அது ஜனநாயகபூர்வமாகவும் ஆரோக்கியமாகவும் அமையவில்லை என்றும் பெரும்பால்ான ஜனநாயக சக்திகளால் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இது ஓர் தோல்வியடைந்த சந்திப்பாகவே கருதப்படுகிறது.

இலங்கையில் செயற்படும் மாற்று இயக்கங்கள் கட்சிகள் அனைத்துமே அரச ஆதரவு பெற்றவையே இவற்றில் எந்த வேறுபாடும் இல்லை என அங்கு பலராலும் கருத்து முன் வைக்கப்பட்டது. மேலும் ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்திய அமைப்புகள் இன்றும் ஆயுதம் வைத்துள்ள அமைப்புகள் மனிதஉரிமை மீறல்களில் ஈடுபடுகின்றன என்றும் அவற்றை நிறுத்துவதற்கான வழிவகைகள் ஆராயப்பட வேண்டும் என்றும் அங்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

வெகுவிரைவில் வெளியிடப்படவுள்ள விதாரனவின் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளின் தீர்வுத் திட்டம் ஏற்புடையதாக இருக்கும் பட்சத்தில் மாற்றுக் கட்சிகள் கூட்டாக அதனை ஆதரிக்க வேண்டும் என அங்கு தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்வுத் திட்டம் ஏற்புடையதாக இருக்குமா? அல்லது இலங்கைப் பாராளுமன்றத்தால் ஏற்கப்படுமா என்ற சந்தேகம் எழுப்பப்பட்டது. இந்த ஐயம் இருப்பினும் தமிழ் தரப்பு நியாயமான தீர்வுக்கு தயாராக உள்ளது என்பதைக் காட்டவும் சமாதான வழியில் மட்டுமே தீர்வு சாத்தியம் என்பதாலும் இதனைச் செய்ய வேண்டும் என அங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.





பாரம்பரிய அரசியல் பின்ணியுடைய முத்த தலைவர் என்ற வகையில் ஆ.சங்கரி கட்சி அரசியலுக்கு அப்பால் ஜனநாயகச் சின்னமாக வேண்டும் என வி சிவலிங்கம் அங்கு கருத்து வெளியிட்டார்.

இறுதியாக பொது உடன்பாட்டுக்கு உட்பட்டு செயற்படுவதற்கு தான் எப்போதும் தயாராக இருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆ.சங்கரி அங்கு தனது நிலைப்பாட்டைத் தெரிவித்தார். இச்சந்திப்பு மூன்று மணி நேரம் நீடித்தது

சுட்டணியின் லண்டன் கிளையின் நிர்வாகக் குழுவிற்கு கருணா அணியின் லண்டன் பிரதிநிதியான கிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டு உள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் லண்டன் கிளையின் கூட்டம் யூலை 29 அன்று இடம்பெற்றது. அக்கூட்டத்தில் லண்டன் கிளைக்கான புதிய நிவாகக்குழு தெரிவு செய்யப்பட்டது. இக்குழுவில் முன்னர் கூட்டணியின் அங்கத்தவர்கள் இல்லாதவர்களான டொக்டர் நீதிராஜா இணைத் தலைவராகவும் தீபன் பொருளாளராகவும் கிருஷ்ணன் மற்றும் டொக்டர் பாலா நிர்வாகக் குழு உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். இணைச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட வி சிவலிங்கம் அதனை ராஜிநாமச் செய்ய உள்ளார்.

ஏனைய பதவிகளை கூட்டணியின் நீண்டகால உறுப்பினர்களே ஏற்று உள்ளனர். டொக்டர் நிக்கலஸ்பிள்ளை தொடர்ந்தும் தலைவராக உள்ளார். பொன் சிவசுப்பிரமணியம் செயலாளராகவும் அரவிந்தன் இணைப் பொருளாளராகவும் தெரியப்பட்டனர்.



ஓகஸ்ட் 26 ல் அமிர்தலிங்கத்தின் 80வது பிறந்த தின நினைவுப் பேருரை ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

**இலங்கையில் தினமும் 100 இளம் சிறார்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகிறார்கள். சுற்றுலாப் பகுதிகளில் 10000-15000 ஆண் பிள்ளைகள் பாலியல் தொழிலில் உள்ளனர்.**

**உண்மைகள் உறங்குவதில்லை.**

**அரசு தரப்பு அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கல் ஆலோசனைகளை முன்மொழிய அழுத்தங் கொடுக்க முடியுமானால் பேச்சுவார்த்தை மூலமானதொரு தீர்வு சாத்தியமே.**

# அரசியல் தீர்வொன்றிற்கு அழுத்தம் கொடுக்க உறக்கம் கலைத்து எழுப்பும் - ஒரு முயற்சி !


Sri Lanka Decmocracy Fotum - SLDF

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்காக சர்வதேச அளவில் குரல்கொடுத்துவரும் சுயாதீன அமைப்பு.



இலங்கை அரசின் பிரதான ஆளும் கட்சியினர், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கு அண்மையில் சமர்ப்பித்திருந்த அதிகாரப் பரவலாக்கம் பற்றிய ஆலோசனைகள், புரையோடிப் போயுள்ள இலங்கை இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வு காண போராடி வந்தவர்களுக்கு மிகவும் ஆத்திரத்தை ஊட்டியுள்ளன. 1981ல், அப்போதைய இலங்கை ஜனாதிபதியால் 'அரை குறை' அதிகாரங்களுடன் அமுலாக்க முயற்சிக்கப்பட்ட மாவட்டரீதியில் தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் மசோதாவே, இப்போது - ஏறத்தாழ 27 வருடங்களின் பின்னர் - பிரதான ஆளும் கட்சியின் பிரேரணைகளாக பிரேரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரேரணைகள், இலங்கைத் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளை எந்த வகையிலும் பூர்த்தி செய்யப் போவதில்லை என்ற வகையில் இலங்கை இனப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாக அமையப்போவதில்லை என்பதே எமது கருத்துமாகும்.



இந்நிலையில், பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வு மூலம் மட்டுமே எரியும் இனப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்து, முழுத் தமிழ் மக்களதும் இருப்பையே கேள்விக்குறியாக்கிவரும் கொடிய இனப் போருக்கு ஒரு முற்றுப்புள்ளி இடமுடியும் என்ற முறையில், இலங்கை இனப் பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அதிகபட்ச அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் ஒரு திட்டமாக அமைவதற்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது.

எந்தவித இலக்குமின்றி இடைவிடாது தொடரும் ஈழ விடுதலைப் போரினால் எண்ணிலடங்காத உயிர், உடமை இழப்புகளுடன் தமது இயல்பு வாழ்க்கையையும் இழந்து, வெறும் நடைப் பிணங்களாக வாழும் எமது மக்கள், இலங்கை அரசின் எந்தவொரு 'அரைகுறைத் தீர்வையும்' அனுசரித்துப்போக அவாவலாம்.

எனினும், அதிகபட்ச அதிகாரங்களுடனான தமிழ் அலகு ஒன்றைத் தர இலங்கை அரசு தவறும் தறுவாயில், தமிழ் ஈழ கோசம் மீண்டும் தூசி தட்டப்படுவதை தடுக்க முடியாது போக நேரிடும். இதுவரையும், எவருக்கும் ஏற்புடையதாகாத இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு குறைவான எதையும் ஏற்க மறுத்துவரும் தமிழீழ தேசியவாதிகளும், போரொன்றின் அனுசரணையாளராகவுள்ள புலம்பெயர் தமிழருள் ஒரு பெரும் பிரிவும், இனவாத அரசியலின் நெருக்குதலில் உள்ள இலங்கை அரசும், சிறுபான்மையாகவேனும் உள்ள சிங்கள தேசிய வாதிகளும், போரொன்றை தொடரவே இவை துணை புரியும்.

இந்நிலையில் தமிழர் தரப்பினைத் திருப்திசெய்யும் நிரந்தர தீரவொன்றைத்தர இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கு புலம்பெயர் நாடுகளிலுள்ள பகுத்தறிவுத் தமிழர் அனைவரதும் பங்களிப்பு அவசியமாகிறது.

## பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வு சாத்தியமா ?

இலங்கை இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமானதொரு தீர்வினைக்காண முனைந்தவர்கள் திரும்பத் திரும்பத் தோல்விகளையே தழுவி வந்தது இலங்கை அரசியலின் ஆரோக்கிய மற்றதொரு அம்சமாக இருந்து வந்துள்ளது. இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் சட்ட சபை ஆசனங்களை 'சரிவர'ப் பகிர்ந்து கொள்ளும் சச்சரவுகளாக தொடங்கி, சுதந்திரத்திற்குப் பின்னர், தனிச் சிங்களச் சட்டம் - தமிழ் பிரதேசங்கள் பறித்தெடுப்பு - தரப்படுத்தல் - தமிழ் - சிங்கள இனக் கலவரம் என 'தறிகெட்டு' ஓடிவந்த தமிழ் இனப் பிரச்சனையை பேசித் தீர்ப்பதற்கு, தமிழ் - சிங்கள அரசியல் தலைவர்களால் இணக்கங் காணப்பட்ட ஏற்பாடுகள் எவையும் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பது உண்மையே.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தீர்க்க தரிசனமற்ற அரசியல் வழிமுறைகளின் ஆதரவாளர்கள், இதனையே 'பேசிப் பயனில்லை' எனப் பிரச்சாரப்படுத்தி வருகின்றனர். ஆனால், ஈழப்போராட்டம் தொடங்கிய பின்னர், இனப்பிரச்சினையை இணக்கமாக பேசித் தீர்க்க பிரதான தமிழ் அரசியல் தலைமைகள் எவையும் இதய சுத்தியுடன் ஈடுபட்டிருக்கவில்லை என்பதை இந்த போரின் 'போதகர்கள்' புரிந்து கொள்வதில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தத்துடன் ஒரு வரப்பிரசாதமாக வந்த வட - கிழக்கு மாகாண சபையும், நல்லதொரு பிரேரணை என பின்நாளில் புலிகளாலேயே பகிரங்கமாக பரிந்துரைக்கப்பட்ட பொதுஜன அய்க்கிய முன்னணி அரசின் தீர்வுத் திட்டமும் , தமிழர் தரப்பினாலும் தட்டிக் கழிக்கப்பட்டதற்கு இதுவரையில் எந்தவித தர்க்கீக நியாயங்களும் தரப்பட்டிருக்கவில்லை. மாவட்ட சபை, பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என ஏறத்தாழ 30 ஆண்டுகளாக 'தத்தி தத்தி' வந்த 'பேசிப் பிரச்சினையைத் தீர்க்கும் திட்டங்கள்' அனைத்தும், திம்புப் பேச்சுவார்த்தையுடன் தமிழ் தேசியவாதிகளால் ஒரு தரிப்பிற்கு தள்ளிவரப்பட்டது துரதிருஸ்ட வசமானது.

தமிழ் அரசியல் தலைமைகள் 'பேசித் தோற்ற' காலத்தை விட, போரிட்டு வரும் காலமே அதிகம். 30 ஆண்டு காலமாக பேசித் தோற்றதால் 'இனிப் பேசிப் பயனில்லை' என்றால், 31 ஆண்டு காலமாகப் போரிட்டும் எமது மக்கள் எந்தப் பயனையும் பெறவில்லை. எமது மக்களும், அகில உலக அரசுகள் அனைத்தும், போருக்கு எதிராகவுள்ளதொரு நிலையில் பேசிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இலங்கையிலுள்ள எமது மக்கள் அனேகரும், புலம்பெயர் தமிழருள் 'பலம்' மிக்க ஒரு பகுதியும், முஸ்லீம் மக்களும், சிங்கள மக்களுள் ஒரு பெரும் பிரிவும், இந்திய, அமெரிக்க, ஜரோப்பிய நாடுகள் உட்பட அனைத்து உலக அரசுகளும், பேச்சுவார்த்தை மூலமானதொரு தீர்வுக்கே அனுசரனையாக உள்ளனர். பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றிற்கு பெருகிவரும் உலக ஆதரவுடன், போரிடும் பிரிவினர் அனைவரையும் பேச்சுவார்த்தை மேசைக்குத் திருப்ப இலங்கை அரசு தரப்பு அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கல் ஆலோசனைகளை முன்மொழிய அழுத்தங் கொடுக்க முடியுமானால், பேச்சுவார்த்தை மூலமானதொரு தீர்வு சாத்தியமே.

பேச்சு வார்த்தை மூலம் எந்தவித பலனுமில்லையெனில், போரொன்றை தொடர்ந்து புரிவதே எமக்குள்ள ஒரே வழியாகிறது.


## ஆயுதப் போராட்டம், ஒரு அரசியல் தீர்வுக்கு இட்டுச் செல்லுமா ?

தமிழீழ விடுதலைப் போரானது தனி ஒரு மனிதனின் விருப்பு வெறுப்பு சம்பந்தமான ஒரு விடயமாகி வந்து முழுத் தமிழ் மக்களையும் இன்று தற்கொலையின் விளிம்புக்கே தள்ளி வந்துள்ளதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். முதலாவது ஈழப் போர், இரண்டாவது ஈழப் போர் என்று 'இழுபறிப்பட்டு' வந்த தமிழீழ விடுதலைத் தாகம், முதலாவது பேச்சுவார்த்தை, இரண்டாவது பேச்சுவார்த்தை என நிலை குலைந்து, இன்று, 'போருமின்றி' - 'பேச்சுவார்த்தையுமின்றி' - எந்தவொரு உயிருக்கும் உத்தரவாதமற்றதொரு நிலையில் எமது மக்கள் அனைவரையும் நிர்க்கதியாக்கி உள்ளது.

ஆயுதப் போர் மூலம் இலங்கை அரசை அடிபணியச் செய்து 'இழந்த உரிமைகளைப்' பெற்றுக் கொள்ளும் தமிழர் தலைமையின் 'தீர்க்க தரிசனம்', தோற்றுப்போனதொரு சூத்திரமாகியுள்ளதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். தான்தோன்றித்தனமான தமிழ் ஆயுத அரசியல் வேலைமுறைகள் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றை இன்னும் இன்னும் சிக்கலாக்கி வருவதே உண்மை. புலிகளின் ராணுவ வெற்றிப் போதையில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் பலர், இதனைப் புரிந்து கொள்ள முயல்வதில்லை.

இனவிடுதலைக்காக இதுவரைகாலமும் இடம்பெற்ற போர், தமிழ் தேசிய இனப்பிரச்சினையை மேலும் மேலும் சிக்கலாக்கி வந்துள்ளதுடன், தமிழ் மக்களை அழித்து மொத்த தமிழ் இனத்தின் இருப்பையே இன்று கேள்விக்குறியாக்கி வருகிறது. எந்த நாட்டிலும் போரின் மூலம் இனப்பிரச்சினைகள் தீர்வுக்கு வந்ததாக வரலாறு இல்லை.

இதுவரைகால யுத்த அழிவுகள், எந்தவிலை கொடுத்தாவது இந்தப் போர் நிறுத்தப்படவேண்டுமென்பதையே எமது மக்கள் அனைவரதும் ஏக்கமாக்கியுள்ளதை நாம் உணர வேண்டும். >>>



**உண்மைகள் உறங்குவதில்லை.**

**இந்தியாவில் 80 மில்லியன் வயதானவர்கள் உள்ளனர். 66 % வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளனர். இவர்களில் 12 மில்லியன் பேர் கட்ராக்கினால் பார்வை இழந்துள்ளனர்.**

# “தமிழ் இனவாதம் சோனகர் இனத்தை அடக்கவும் அழிக்கவும் உரிமை அற்றது“

“தமிழ் இனவாதம் சோனகர் இனத்தை அடக்கவும் அழிக்கவும் உரிமை அற்றது“ என சட்ட வல்லுனர் முகம்மது எஸ் ஆர் நிஸ்தார் யூலை 15ல் பரிஸில் இடம்பெற்ற, மனித உரிமைவாதியும் இலக்கிய ஆர்வலரும் உயிர் நிழல் சஞ்சிகையின் ஸ்தாபகருமான கலைச் செல்வனின் 2ம் ஆண்டு நினைவு நிகழ்வில் தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினையும் நிரந்தர தீர்வுக்கான வரலாற்றுத் தடங்கல்களும் அது எதிர்கொள்ளும் சவால்களும் எனும் தலைப்பில் இடம்பெற்ற அரசியல் கலந்துரையாடலின் போதே முகம்மது எஸ் ஆர் நிஸ்தார் மேற்குறிப்பிட்ட கருத்தை வெளியிட்டார்.



முஸ்லீம் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்றும் இலங்கையில் வாழ்கின்ற முஸ்லீம்கள் சோனகர் என்ற இன அடிப்படையில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வது காலத்தின் தேவை என்றும் சிங்கள பேரினவாதம் எப்படி தமிழ் தேசியத்தை அடக்கவோ அழிக்கவோ உரிமை அற்றதோ அதேபோல் தமிழ் இனவாதம் சோனகர் இனத்தை அடக்கவும் அழிக்கவும் உரிமை அற்றது என்றும் முகம்மது எஸ் ஆர் நிஸ்தார் அங்கு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் லண்டனில் இருந்து மனித உரிமைவாதிகள் நிர்மலா இராஜசிங்கம், வி சிவலிங்கம், முகம்மது எஸ்.ஆர்.நிஸ்தார், ராகவன், டொக்டர் பாலா, கீரன் மற்றும் பேர்லினில் இருந்து சுசீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர்.

அருந்ததியின் ஆரம்ப உரையோடு ஆரம்பித்த இந்நிகழ்வை பாரிஸ் நண்பர்கள் வட்டம் ஏற்பாடு செய்து இருந்தது. “கனவுகளுக்கு நிறம் இருந்த போது” எனும் தலைப்பிலான கலைச்செல்வனின் நினைவுப் பேருரையை லண்டனில் இருந்து வந்திருந்த நா.சபோசன் நிகழ்தினார்.



இதனைத் இதொடர்ந்து இளம் சிறார்கள் தமரா, அருணா ஆகியோர்களின் ‘இசையின் சுதந்திரம்‘ எனும் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. இந் நிகழ்வில் நோர்வேயில் இருந்து கலந்து கொண்ட இளம் ஒளி ஓவியக் கலைஞ இலக்கியாவின் ‘கறுப்பு வெள்ளை‘ என்ற தலைப்பு இடப்பட்ட ஒளி ஓவிய கண்காட்சியும் இடம்பெற்றது. அத்தோடு இவரின் இசை இடப்பட்ட ஒளி ஓவியங்களும் திரையிடப்பட்டன.

## இதுவரைகால யுத்தம் எமக்குத் தந்ததென்ன ?

உலகிலுள்ள அதிகளவில் இடம் பெயர்ந்த சமூகங்களுள் ஒன்றாக தமிழ் சமூகமும் உள்ளதாக சர்வதேச தரவுகள் கூறுகின்றன. ஏறத்தாழ ஏழு லட்சம் மக்கள் எமது நாட்டினுள்ளேயே இடம் பெயர்ந்துள்ளனர் . இவர்களுள், 2006க்குப் பின்னர் இடம்பெயர்ந்தவர்கள் மட்டும் இரண்டரை லட்சம் பேர். வடக்கிலிருந்து இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்ட ஒரு லட்சம் முஸ்லீம் மக்களும் இவர்களுள் அடங்குவர்.

இவர்களைவிட ஏறத்தாழ அய்ம்பதினாயிரம் மக்கள் அகதிகளாக இந்திய அகதி முகாம்களில் வசிக்கின்றனர். இவர்களுடனும், இந்தியாவில் ஏனைய இடங்களில் இடம்பெயர்ந்து உள்ளவர்களுடனும், ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் அனைத்து நாடுகளில் அகதிகளாக புலம் பெயர்ந்து உள்ளவர்களுமாக, ஏறத்தாழ ஒன்றரை மில்லியன் இலங்கை மக்களை இதுவரைகால யுத்தம் ‘வேரோடு பிடுங்கி வெளியில் எறிந்துள்ளதாக’ ஆய்வுகள் கூறுகின்றன. வட - கிழக்கில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ அரைவாசியாகி உள்ளதை நாங்கள் ஒரு அபாய அறிவிப்பாகவே கொள்ள வேண்டும். மலையக மக்களை தவிர்த்தால், இலங்கையின் மொத்த சனத்தொகையில், நாங்கள் இன்று 8.5 வீதமாகவே உள்ளோம்.

இதுதவிர, இதுவரைகால யுத்தம் ஏறத்தாழ எழுபதினாயிரம் உயிர்களை பலிகொண்டுள்ளதாக ஒரு எண்கணிதம் உண்டு. உண்மையான உயிர் இழப்புகள் இதனைவிட அதிகம் என்பதே எமது கருத்து. இவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் அப்பாவிப் பொது மக்களே.



இறந்தவர்களைத் தவிர, கண்ணி வெடியினால் கை, கால் இழந்து போனவர்கள் வட - கிழக்கில் வசிக்கும் மக்களில் ஏறத்தாழ 5 வீதம் என கணிப்பீடுகள் குறிப்பிடுகின்றன.

இறந்தவர்களையும், இடம்பெயர்ந்தவர்களையும் தவிர, இதுவரை கால யுத்தத்தில் எமது மக்கள் இழந்தவைகள் இன்னும் அனேகம்.

குறிப்பாக, இதுவரைகால கொடிய யுத்தத்தால் ஏறத்தாழ அறுபதினாயிரம் பெண்கள் விதவைகளாக வட - கிழக்கு மாகாணங்களில் வசிக்கின்றனர். இவர்களுள் ஒரு பெரும் பகுதியினர் வாழ வழியற்ற ஏழைகள். பலர், பெருங் குடும்ப பாரத்தையே சுமக்க வேண்டிய பரிதாப நிலையிலுள்ளவர்கள். இதுவரைகால யுத்தத்தால், ஒரு வேளை உணவுக்கே இன்னொருவரிடம் கையேந்த வேண்டிய நிலைக்கு இவர்களை நாங்கள் இட்டுச்சென்றுள்ளோம்.

இவை தவிர எமது மக்களுக்கான அடிப்படை வசதிகள் அனைத்தையும் இந்த யுத்தம் சீரழித்து சிதைத்துள்ளது. ஏறத்தாழ அய்ம்பது வீதமான எமது மக்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகளைப் பெறுவதில் சிரமங்களுண்டு. மருத்துவத்துறையில் ஆளணி பற்றாக்குறை அபாயகரமான அளவு அதிகரித்து வருகிறது. பல பாடசாலைகளும், வைத்தியசாலைகளும் முற்றாக இயங்க முடியாத நிலைமையில் உள்ளன. ஆசிரிய பற்றாக்குறையும் ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது.

எமது மக்களில் ஏறத்தாழ இருபத்தைந்து வீதமானவர்கள் இதுவரை கால யுத்த வழிமுறைகளால் ஏதோவொருவித மனநோயினால் பாதிப்படைந்து வாழ்கின்றனர். இவர்கள் போதுமான மருத்துவ வசதிகளைப்பெற எமது பகுதிகளில் எந்த ஏற்பாடுகளுமில்லை.

தொடரும் யுத்தம், இந்த எண்ணிக்கைகள் அனைத்தையும் அதிகரித்து வரும் என்பதை எவரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த யுத்தம் இன்னுமொரு தசாப்தகாலம் தொடர்ந்தால், எமது இனமே சிலவேளைகளில் இல்லாது போகலாம். காலத்தை வீணடிக்கும் ஒவ்வொரு கணமும், எமது இனத்தின் அழிவுக்கே நாம் அத்திவாரமிடுகிறோம்.

எமது இனத்தை அழிக்கும் இந்த கொடிய யுத்தம் ஒரு முடிவுக்குவர வேண்டுமானால், பேச்சுவார்த்தை மூலமாக எமது பிரச்சினைகளைத் தீர்க்க போரிடும் தரப்புக்கு நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும். புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழருள் ஒரு பெரும் பகுதியினர் போருக்கு ஆதரவானதொரு பரிதாப நிலையிலுள்ளதால், இது - இங்குள்ள பகுத்தறிவுத் தமிழரின் பொறுப்பாகிறது.

இனப் பிரச்சினையின் தீர்வொன்றுக்கான சாதகமான சூழ்நிலைகள் இன்றுபோல் முன்னர் என்றும் இருந்ததில்லை. இலங்கை அரசியலில் முதன் முதலாக அதிகார பரவலான அரசியல் தீர்வொன்றிற்கு ஆதரவாக பௌத்த குருமார் உட்பட பிரதான கட்சிகள் பல பகிரங்கமாக கருத்துத் தெரிவித்துள்ளன. அத்துடன் அனைத்துலக ஆதரவும் எமக்குண்டு. இந்நிலையில் அரசதரப்புக்கு அழுத்தங்கொடுத்து அதிகபட்ச அதிகார பரவலாக்க ஆலோசனைகளை முன்மொழிய வைக்க முடியுமானால், பேச்சுவார்த்தை மூலமாக இலங்கை இனப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வரும்.

எனவே, இதய சுத்தியுடன் இலங்கையில் உள்ள சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நடைமுறைச் சாத்தியமானதொரு தீர்வுக்கு உழைக்க எமது மக்களின் எதிர்காலத்தில் அக்கறை உள்ள அனைவரையும் வேண்டுகிறோம்.

(இவ்வறிக்கை Sri Lanka Democrcy Forum - SLDF இனால் இலண்டன் குரலுக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டது. மேலதிக விபரங்களுக்கு: www.lankademocracy.org மின் அஞ்சல்: contact@lankademocracy.org)

**இதுவரை கால யுத்தத்தால் 50000 பெண்கள் வட - கிழக்கில் விதவைகளாகி உள்ளனர். மேலும் 25 வீதமான தமிழர்கள் ஏதாவதொரு மனநோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.**

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# Low Cost Accomodations in London

**Finchley Rd, Archway, Holloway Rd Tube Stations** அருகாமையில்

- **Flats**
- **Studios**
- **Rooms**

நூற்றுக்கும் மேற்பட்ட வதிவிடங்கள் வாடகைக்கு உண்டு.
போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடம்.

## மாத வாடகை £400 - £600 மட்டுமே

குறிப்பு : மாத வாடகையுடன் ஒரு மாத வாடகை முற்பணமாக செலுத்த வேண்டும். கவுன்சில் ரக்ஸ் மற்றும் கட்டணங்களை குடி இருப்பாளர்களே செலுத்த வேண்டும். மாதாந்த வாடகை யை வங்கிக் கட்டளை - **Standing Order** மூலம் செலுத்த வேண்டும். **D.S.S** ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**Tel\Fax: 020 8905 0452 Email: tarrin@desilugroup.com Web: www.desilugroup.com**

**Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of Companies**

**Collingwood Business Centre, Mercers Rd, London N19 4PU**

# வோல்தம்ஸரோ கற்பக விநாயகர் ஆலயம்

**2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX Tel: 020 8527 3819**

## ஆறாம் ஆண்டு மகோற்சவ இரத்தோற்சவ விஞ்ஞாபனம்

கொடியேற்றம் - வெள்ளி
07-09-07 காலை 11 மணி

தேர்த்திருவிழா - ஞாயிறு
16-09-07 காலை 10 மணி
முதல் மாலை 4 மணிவரை

தீர்த்தம் - திங்கள்
17-09- 07
காலை 10:45 மணி

ஆவண சதுர்த்தி - சனி
15 09-2007



உற்சவ காலங்களில்
இரவு 8:30 மணிக்கு திரு
சிதம்பரநாதன், கேதீஸ்,
உதயசங்கர், மணிகண்டன்
குழுவினரின் நாதஸ்வரக்
கச்சேரி நடைபெறும்.

உற்சவ காலங்களில்
வழங்கப்படும் பக்தர்களின்
காணிக்கை தாயகத்தில்
உள்ள சிறுவர்
இல்லங்களுக்கு அனுப்பி
வைக்கபடும்.